சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.92/2020

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | வயது | 54 |
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பிள்ளையார் கோவில் வீதி, காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

நான் 5 ஆம் வகுப்பு வரை படித்து உள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் எனக்கு கையெழுத்தைத் தவிர எழுத படிக்க தெரியாது. வழக்குகளை தாக்கல் செய்ய எங்கள் வழக்கறிஞருக்கு யார் தகவல் சொன்னது என்றால் வாதிகள் அனைவரும் சேர்ந்து சொன்னோம். என்னுடைய பிறந்த தேதி என்ன என்றால் நினைவில்லை. எனது தாத்தா, அப்பா மற்றும் 1 ஆம் பிரதிவாதி கந்தசாமிக்கு விற்பனை செய்து உள்ளார்கள் என்றால் விற்பனை செய்தது எனக்கு தெரியாது. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதியும் இரங்கசாமியும் கிரையம் வாங்கியது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அப்பா சொல்லி தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது. எனது தாத்தாவும் எனது அப்பாவும் விற்பனை செய்த கிரைய ஆவணத்தை நான் படித்துப் பார்த்து உள்ளேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. கிரையம் வாங்கிய பத்திரத்திலும் என்ன எழுதப்பட்டு உள்ளது என்று தெரியாது என்றால் சரி தான். ஒரு சொத்திற்கு வருவாய் ஆவணங்களும் இருக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். அடங்கலில் யார் யார் எந்த எந்த காலத்தில் என்ன என்ன விவசாயம் செய்து உள்ளார்கள் என்ற விபரம் தெரிய வரும் என்றால் சரி

தான். தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. அதனை தாக்கல் செய்தால் யார் அனுபவத்தில் இருப்பது என தெரிந்து விடும் என்பதால் தான் அதனை தாக்கல் செய்ய வில்லை என்றால் சரி அல்ல. நானோ மற்ற வாதிகளோ தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்தால் என்ன என்ன காலத்தில் என்ன என்ன பயிர் செய்து வந்தோம் என்ற விபரத்தை பிராதிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லி இருப்போம் என்றால் தற்போதும் நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம். சோளம், ராகி, கம்பு உள்ளிட்டவை பயிர் செய்துள்ளோம். இந்த விபரத்தை பிராதில் கூறவில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் இருப்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. கூட்டு சுவாதினத்தில் இருபபதாக கூறிவிட்டு முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரி அல்ல. அதனால் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் 3 ஆம் பிரதிவாதியை பார்த்து பேசியது இல்லை. அவரிடம் பாகமும் கேட்க வில்லை. பிராது 1 வது தாவா சொத்தை 3 ஆம் பிரதிவாதி கிரயம் வாங்கி 4 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் எனது அப்பா இறந்த பின்னர் தான் தெரியும். அந்த விபரத்தை பிராதில் கூறவில்லை என்றால் சரி அல்ல. நிரூபண வாக்குமூலம் பத்தி 21 ல் கூறியவற்றை பிராதில் கூறவில்லை என்றால் சரி அல்ல. நான் எந்த தேதியில் எங்கு வைத்து பாகம் கேட்டேன் என பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி தான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் 3 ஆம் பிரதிவாதியை பார்த்தது இல்லை. என்ன காரணத்திற்காக பிரதிவாதிகள் பாகம் செய்து கொடுக்க மறுக்கிறார்கள் என்ற விபரத்தையும் கூறவில்லை என்றால் சரி அல்ல. எந்த ஊர் பெரியவர்கள் முன்னிலையில்

பேசினோம் என்ற விபரத்தையும் பிராதில் கூறவில்லை என்றால் சரி அல்ல. உண்மையில் அது போல பஞ்சாயத்து நடந்து இருந்தால் அதைப் பற்றி விரிவாக கூறி இருப்பேன் என்றால் சரி அல்ல. எந்த ஆவணங்களை பார்த்து வில்லங்கத்திற்கு உட்பட்டது என தெரிந்து கொண்டேன் என்றால் எனது அப்பா சொல்லி தெரிந்து கொண்டேன் ஆவணங்களை பார்க்கவில்லை. என்னுடைய தாத்தா இராமைய கவுடரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்ய வில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் இருக்கும் விபரம் தெரியும். ஆனால் அவர்களின் பெயர் தெரியாது. தாவா சொத்து உண்மையிலேயே பூர்வீக சொத்தாக இருந்தால் என் அப்பாவுடன் பிறந்தவர்களையும் இந்த வழக்கில் சேர்த்து இருப்பேன் என்றால் சரி அல்ல. அவர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரி அல்ல. தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் யார் அனுபவத்தில் இருக்கிறார்களோ அவர்களது பெயரில் தான் உள்ளது என்றால் சரி தான். எங்கள் பெயருக்கு வருவாய் ஆவணங்களை மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரி தான். எனக்கும் மற்ற வாதிகளுக்கும் தாவா சொத்தில் பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரி அல்ல. அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G. Gengaraj.
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.